உ

# திருநீற்றின் பெருமை



வெளியீடு: மஹாத்மா அச்சகம், ஏழாலை.

02-06-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

திருவாலவாய்த் திருநீற்றுப் பதிகம் பண்: – காந்தாரம்

பரையின் வரலாறு

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் றிருவாலவாயான்றிரு நீறே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர்தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மைதவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப்புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான்றிரு நீறே. 2

முத்திதருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர்புகழ்வது நீறு
பத்திதருவது நீறு பரவவினியது நீறு
சித்திதருவது நீறு திருவாலவாயான்றிரு நீறே. 3

காணவினியது நீறு கவினைத்தருவது நீறு
பேணியணிபவர்க் கெல்லாம் பெருமைகொடுப்பது நீறு
மாணந்தகைவது நீறு மதியைத்தருவது நீறு
சேணந்தருவது நீறு திருவாலவாயான்றிரு நீறே. 4

பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு
பேசவினியது நீறு பெருந்தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசைகெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திருவாலவாயான்றிரு நீறே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்தவமாவது நீறு அவலமறுப்பது நீறு
வருத்தந்தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர்பூசும்வெண் ணீறு
திருத்தகுமாளிகை சூழ்ந்த திருவாலவாயான்றிரு நீறே. 6

எயிலதுவட்டது நீறு இருமைக்குமுள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத்தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப்பொலிதரு சூலத் தாலவாயான்றிரு நீறே. 7

இராவணன்மேலது நீறு எண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந்திரு மேனி யாலவாயான்றிரு நீறே. 8

மாலொடயனறி யாத வண்ணமுமுள்ளது நீறு
மேலுறைதேவர்க டங்கள் மெய்யதுவெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கு மின்பந்தருவது நீறு
அராவணங்குந்திரு மேனி யாலவாயான்றிரு நீறே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டிகைக்கையர்க ளோடு சாக்கியர்கூட்டமுங் கூடக்
கண்டிகைப்பிப்பது நீறு கருதவினியது நீறு
எண்டிசைப்பட்டபொ ருளா ரேத்துந்தகையது நீறு
அண்டத்தவர்பணித் தேத்து மாலவாயான்றிரு நீறே. 10

ஆற்றலடல்விடை யேறு மாலவாயான்றிரு நீற்றைப்
போற்றிப்புகலிநி லாவும் பூசுரன்ஞானசம் பந்தன்
தேற்றித்தென்ன னுட லுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றியபாடல்கள் பத்தும் வல்லவர்நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

★ ★ ★

# விபூதியின் பெருமை

*வியாகரண சிரோமணி* தி. கி. சிதாராம சாஸ்திரிகள்

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாயிற்
தங்கா வினைகளுஞ் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.

— திருமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்செய்த நல்வினையின் பயனுய் நாம் சைவ சமயத்தில் பிறந்திருக்கின்றோம். அதனுல் எமக்கு விபூதியும், உருத்திராட்சமும், சமய சாதனப் பொருள்களாக அமைந்துள்ளன. அவைகளுள் விபூதியை நாம் எவ்வெப்பொழுது அணியவேண்டும்? எவ்வாறு அணிய வேண்டும்? அதன் பெருமை எத்தகையது? குருமார்கள் விபூதி அளிக்கும்போது கூறும் ஆசி வசனத்தின் கருத்து யாது? இவைகளை நாம் அறிந்திருக்க வேண்டும்.

சமயம் என்ற சொல்லுக்குக் கட்டுப்பாடு என்று கருத்தாகும். நல்வழி என்ற கருத்துக் கொள்ளுவோரும் உண்டு. சைவ சமயம் என்பதற்குச் சிவனை அடைவதற்குரிய நல்வழி என்பது விளக்கமாகும். அவ்வழியிற் செல்லுகின்ற நமக்கு விபூதி முதற்பொருளாகும். இதன் சிறப்பை வேதாகம புராணங்களும், சமயப் பெரியார்களும் நன்ருக விளக்கியுள்ளனர். அவைகளுட் சில பின்வருவனவாம்.

இறைவனை வழிபடுவதற்கு நமது உள்ளமும் உடலும் எப்பொழுதும் தூய்மை உடையனவாக இருக்க வேண்டும். உள்ளத் தூய்மை மந்திர ஜபங்களால் உண்டாகும். அந்த ஸ்நானம் ஐந்து வகை என்று ஆகம நூல் கூறுகின்றது. நீரில் ஸ்நானம் செய்தல் வாருண ஸ்நானம் என்றும், விபூதி அணிதல் ஆக்னேய ஸ்நானம் என்றும், மந்திரம் கூறி நீரைத் தெளித்தல் மானஸ ஸ்நானம் என்றும், வெய்யிலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய மழையில் நனைதல் திவ்விய ஸ்நானம் என்றும், பசுக்கள் மந்தையிலிருந்து வரும்பொழுது நிலத்திலிருந்து மேலே எழும் புழுதிகள் உடலில் படுவது வாயவ்ய ஸ்நானம் என்றும் விளக்கியுள்ளது. பின்னது இரண்டும் சில சந்தர்ப்பங்களிலே நிகழக் கூடியன. அவை விசேட தூய்மையை அளிப்பனவாகும். முன்னது மூன்றும் தினமும் நடைபெறக் கூடியவை. சைவ சமயத்தில் வாழ்பவர் யாவருக்கும் இம்மூன்று ஸ்நானமும் நியதியானவை. வாருண ஸ்நானத்தினுல் உடல் அழுக்கு நீங்கப்பெறுகின்றது. ஆக்னேய ஸ்நானத்தினுல் பாசங்கள் நீக்கப்படுகின்றன. இவ்விரண்டினுலும் உடல் தூய்மை உண்டாகின்றது. மந்திரம் கூறிப் புரோட்சித்தலால் உள்ளத் தூய்மை உண்டாகின்றது. உள்ளமும் உடலும் தூய்மை பெற்றவன் இறை வழிபாட்டிற்கு உரியவனுகின்முன். இந்த ஐந்து வகையான ஆகம ஸ்நான முறைகளை ஆகம சாஸ்திரம் தெளிவாகக் கூறுகின்றது.

நீரில் ஸ்நானம் செய்தலால் சுகாதார முறைப்படி உடல் அழுக்குக் கழுவப்படுகின்றது என்பதை யாவரும் அறிவார்கள். மேலும் நீர் உடல் தூய்மையையும் உள்ளத் தூய்மையையும் அளிக்கின்றது என்று வேத மந்திரம் கூறுகின்றது. விபூதி ஸ்நானம் சகலவித பாபங்களையும் நீக்குகின்றது. பாபம் நீங்க உள்ளம் தூய்மையாகும். இந்த உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கந்தபுராணம் அங்கங்கே விளக்கியுள்ளது. அதனை ஒரு பெரியார் தொகுத்துத் தந்திருக்கின்றார்.

வணங்க வேண்டியவர்களை வணங்காது நிமிர்ந்து நின்று அவமதித்த பாபத்தைச் சிரசில் அணியப்படும் விபூதி நீக்குகின்றது. "தலையே நீ வணங்காய்" என்னும் பதிகமும் இதன் அடிப்படைக் கருத்தில் அருளப்பட்டது போலும். உண்ணத் தகாதவற்றை உண்பதனால் வரும் பாபத்தைக் கண்டத்தில் அணியப்படும் விபூதியும், கைகளாற் செய்த பாபத்தைப் புஜங்களில் அணியப்படும் விபூதியும், சிந்திக்கத் தகாதவற்றைச் சிந்திப்பதால் வரும் பாபத்தை மார்பில் அணியப்படும் விபூதியும், ஏனைய உறுப்புக்களால் செய்யப்படும் பாபத்தை நாபி, முதுகு, விலாப்புறம், முழந்தாள் என்னும் உறுப்புகளில் அணியப்படும் விபூதியும் நீக்குகின்றது என்று ஸ்காந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது. வாருண ஸ்நானமும் விபூதி ஸ்நானமும் உடலைச் சுத்தியாக்கி உள்ளத் தூய்மையையும் கொடுக்கின்றன. மூன்றாவது மந்திர ஸ்நானமாகும். மந்திரம் கூறி நீரால் புரோட்சித்துக் கொள்ளுதல் (தெளித்தல்) மந்திர ஸ்நானமாகும். இதற்கு மானஸ ஸ்நானம் என்றும் பெயர். மனதிற்குத் தூய்மை அளிப்பதனால் அப்பெயர் வழங்கப்பட்டது. உள்ளத்தால் நினைப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனைக் காக்கின்றது என்ற கருத்தும் பொருத்தமாக அமைந்துள்ளது. இவ்வாறு உடலும் உள்ளமும் தூய்மை பெற்றவன் இறைவழிபாட்டுக்குத் தகுதியுள்ளவனாகின்றான். ஆகவே நம்மை இறை வழிபாட்டுக் குரியவராகவே எப்பொழுதும் செய்துகொள்ள வேண்டும். முப்பொழுதும் திருமேனியில் திருநீறு அணிந்து கொள்ள வேண்டும்.

திருநீற்றை அணிந்து கொள்ளும் முறையாவது, பிரணவத்தினால் திரிபுண்டரஞ் செய்து கொள்ள வேண்டும். அகாரம் உகாரம் மகாரம் சேர்ந்தது பிரணவமாகும். அகாரம் மோதிர விரலாகவும், உகாரம் நடு விரலாகவும், மகாரம் சுட்டு விரலாகவும் குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே அம்மூன்று விரல்களால் விபூதியை அணிந்து கொள்ள வேண்டும்.

திரிபுண்டரத்தின் அதிதேவதைகள் பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆவார்கள். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுமே அவர்தம் செயல்கள்.

திருநீற்றை அணிவதனால் வரும் பயனை பஸ்மஜாபால உபநிடதம் பின்வருமாறு போற்றுகின்றது. காலை மாலை நடுப்பகல் முப்பொழுதிலும் கவனமாக விபூதி அணிய வேண்டும். கவனக்குறைவாக விட்டால் பதிதனாகின்றான். விபூதியணியாமல் உணவு அருந்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் தண்ணீர் கூடப் பருகலாகாது. விபூதி அணியாமல் காயத்திரி ஜபிக்கலாகாது. (தேவகாரியம், பிதிர்காரியம், ரிஷிகாரியம்). ஆலய வழிபாடு, இறந்தவரைக் குறித்துச் செய்யப்படும் வழிபாடு, வேதங்களை ஓதுதல், புராண இதிகாச ஆகமங்களை ஓதுதல் இவைகளையும் விபூதி, யணியாமல் செய்யலாகாது. இதுவே சைவ சமயத்திற்குரிய பழைமை யான தர்மம். சகல பாபத்தையும் அகற்றவல்லதும் பேரின்பப் பெரு வாழ்விற்குக் காரணமானதுமாகும். முப்பொழுதும் திருநீறு அணிந் தவன் நான்கு வேத பாராயணப் பயனைப் பெறுகின்றான். சகல புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பயனை அடைகின்றான். இவ்வாறு திருநீற்றின் பெருமையை உபநிடதம் எடுத்துக் காட்டுகின்றது.

குருமார்கள் ஆசி கூறி விபூதி அளிக்கும்போது ஆல் போல் தழைத்து அறுகு போல் படருவாய் என்று ஆசி கூறி அறுகு - அக்ஷதை போடுவதை நாம் காண்கின்றோம். செல்வமும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ்வாயாக என்பது அதன் கருத்தாகும். ஆனால் குரு வாழ்த்துக் கூறித் திருநீறு அளிக்கும்போது கூறும் வாழ்த்து தனிச் சிறப்புடைய தாக விளங்குகின்றது. இந்தத் திருநீறு உனக்கு யாவற்றையும் அளிக் கும் என்று திருநீற்றின் பெருமையைக் கூறிக் குரு அதனை அளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு சொல்லும் வாழ்த்தாவது, அழகு, கல்வி, அறிவு, புருஷார்த்தம், செல்வம், சிறப்பு, புகழ், இம்மைக்குரிய போகப்பொருள், அலங்காரம், ஒழுக்கம், இவைகளை அளிக்கக் கூடியது. உடல் தூய்மையையும், உள்ளத் தூய்மையையும் அளிக்கக் கூடியது. உடலுக்கு வரும் நோய் வியாதி; உள்ளத்திற்கு வரும் நோய் ஆதி. வியாதியை ரோகம் என்றும் ஆதியை சோகம் என்றும் சான்றோர் கூறுவர். உடல் நோயையும் மன நோயையும் நீக்கவல்லது, மக்களைச் சிவமயமாக்கக் கூடியது, பாபக் கலப்பற்றது, மூவுலக வாழ்வையும் அளிக்கக் கூடியது, இந்தத் திருநீறு ஆகும்.

திருநீற்றிற்குப் பூதி, விபூதி, பஸிதம், பஸ்மம், ரக்ஷா என்று பெயர்கள் வழங்கப்படும். சிவஸ்ரூபத்தை அளிப்பதால் பூதி என்றும், ஆன்ம பிரகாசத்தை அளிப்பதால் பஸிதம், பஸ்மம் என்றும், சிறப்பைக் கொடுப்பதால் விபூதியென்றும், பிறவிப் பிணியிலிருந்து பாது காப்பதால் ரட்சை என்றும் பெயர் வழங்கப்படலாயிற்று. இத்துணைப் பெருமை வாய்ந்தது திருநீறு. குரு திருநீற்றை அளிக்கும் பொழுது ஆதரவுடன் பெற்றுச் சிறிது முகத்தைத் திருப்பி அண்ணாந்து விபூதி சிந்தாவண்ணம் தரித்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு பெருமை வாய்ந்த விபூதியை நீ ஒரு பொழுதும் மறக்கலாகாது. உள்ளத்தில் இதனை நீ பதித்துக்கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஒரு குறிப்பு

சேர் பொன். இராமநாதன் அவர்களை அறிந்தவர்கள் அவர் சேவை உணர்வைச் சிந்திப்பவர்கள் அவரை மனிதருள் மாணிக்கம் என வாழ்த்துகிறார்கள்; சைவ அனுபூதிமான்கள் அவரைச் சீவன் முத்தர் எனப் போற்றுகிறார்கள்.

இம்மஹானால் ஸ்தாபிக்கபெற்ற யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயம் இன்று, 02-06-1991 ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஒருமுறை குடமுழுக்குக் காண்கிறது.

திரிகரண சுத்தியும் காரியசித்தியும் அருள்வாய் என்னும் இலட்சிய வாக்கியத்துடன் அவ்வள்ளலார் வழங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரன் கோயிலை மையமாகக் கொண்ட பரமேஸ்வராக் கல்லூரி வளாகம் யாழ். பல்கலைக் கழகமாக இன்று விளங்குகிறது.

எமது சமூகமும், இன்றைய உலகமும் இருளில் மூழ்கி தலை குனிந்து வழிதெரியாது பரிதவித்துக்கொண்டிருக்கிறது. இப்புனித நாளில் திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் தந்து வழிகாட்டி எம்மை ஈடேற்றியருள் செய்ய வேண்டும் என்று உலக பிதா மாதாவாகிய பார்வதி சமேத பரமேஸ்வரனை வேண்டித் துதிக்கின்றோம்.

பாண்டியனின் வெப்பு நோயையும் அப்பரின் சூலை நோயையும் தீர்த்தருளிய திருநீற்றின் பெருமையினை நினைந்து, எமது சமூகத்தின் நோயையும் போக்கியருளும் வண்ணம் பார்வதி சமேத பரமேஸ்வரனை வணங்கி, 'திருநீற்றின் பெருமை' என்ற இச்சிறு நூலைக் குடமுழுக்கினை முன்னிட்டு அன்பர்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

ஏழாலை.

02-06-1991. மஹாத்மா அச்சகத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org